**தேசிய அருங்கலைகள் பேரவை - 2018**

---

## 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தேசிய அருங்கலைகள் பேரவையின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தினதும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களைத் தவிர, சபையின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அறிக்கை முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, சபையின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது நிலையத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு

மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் நிலையம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, நிர்வாகம் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 கணக்காய்வு விடயப்பரப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளரின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக சபையின் கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிறுவகம் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக சபையின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக நிறுவகத்தின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை திருத்தம் செய்யப்பட வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலம் பினிவருவனவற்றை பரீட்சிப்பதற்காக கணக்காய்வு விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்
- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது சபையின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க நிலையம் செயற்படுகின்றதாஎனவும்
- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்
- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

### 1.5.1 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது தொடர்பான உள்ளகக் கட்டுப்பாடு

கொடுக்கல் வாங்கல்கள் முகாமைத்துவத்தின் பொது மற்றும் குறித்துரைக்கப்பட்ட அதிகாரத்துடன் செயற்படுத்துதல் உரிய அறிக்கையிடல் நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கு தேவையான வகையில் கொடுக்கல் வாங்கல்களை பதிவு செய்தல் மற்றும் சொத்துக்களுக்காக கணக்களிதன்மையை பேணிச் செல்லல், முகாமைத்துவத்தினால் பொது மற்றும் திட்டவட்டமான அதிகாரத்துடன் கூடிய மாத்திரம் சொத்துக்களை அணுகுதல், பதிவு செய்யப்பட்ட சொத்துக்களுக்கான கணக்களிதன்மை காணப்படும் சொத்துக்களுடன் நியாயமான காலப்பகுதியில் சீராக்கம் மற்றும் வேறுபாடுகள் காணப்பட்டால் அது தொடர்பாக உரிய நடவடிக்கைகளை எடுத்தல் போன்றவற்றுக்கான நியாயமான உறுதிப்படுத்தலொன்றை பெற்றுக்கொள்வதற்கு போதியளவு “முறையாக திட்டமிடப்பட்ட” உள்ளக கணக்கீட்டு கட்டுப்பாட்டு முறைமையொன்றை நிறுவகத்தினால் பராமரித்துக் கொள்வதற்காக அவசியமாகவுள்ளது. பொதுப் பேரேடு, நாட்குறிப்பு, நாட்குறிப்புஉறுதிச்சீட்டுக்கள், கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள் போன்ற பிரதான கணக்கீட்டு அறிக்கைகளை பேணிச் செல்லல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள் கீழே காட்டப்பட்டுள்ள தலைப்புக்களின் கீழ் உள்ளடக்கப்பட்டுள்ளன.

### 1.5.2 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| | குறித்த நியமங்களுடன் தொடர்பான இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 01<br><br>நியமத்தின் 106 ஆம் பிரிவின் பிரகாரம் வருமான மற்றும் செலவின உருப்படிகள் பொருண்மையாக இருக்கையில் அவற்றின் தன்மை மற்றும் பெறுமானங்கள் வெவ்வேறாக வெளிப்படுத்தப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் வருமான செலவினமாக கணக்கீடு செய்த கூட்டுப்பெறுமதி ரூபா 25,144,662 ஆகவும் செலவினமாக கணக்கீடு செய்த கூட்டுப்பெறுமதி ரூபா 25,182,061 இன் கீழ் பதிவுசெய்யும் போது அவற்றின் தன்மை மற்றும் பெறுமானங்கள் வெவ்வேறாக வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | அமைச்சின் நிதிஏற்பாட்டின் பேரில் கிராமங்களை அபிவிருத்தி செயற்திட்டத்தின் கீழ் இந்நிகழ்ச்சித்திட்டம் செயற்படுத்தப்பட்டதுடன் மொத்த பெறுமதி பொருண்மையானதாக இருந்த போதும் இது ஒரு நிகழ்ச்சித்திட்டமாகும். அதன் பிரகாரம் ஒரு செலவினத் தலைப்பின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டது. | கணக்கீடு நியமத்தின் பிரகாரம் செலவின உருப்படிகள் பொருண்மையாக இருக்கையில் அவற்றின் தன்மை மற்றும் பெறுமானங்கள் வெவ்வேறாக வெளிப்படுத்தப்பட வேண்டும் |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 07<br><br>2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களில் கணக்கீட்டுக் கொள்கைகள் இலக்கம் 05 - இருப்பு மதிப்பீட்டின் கீழ் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் கையேற்பு மற்றும் உடைத்து அகற்றுதல் தொடர்பான தகவல்கள் வெளிப்படுத்தப்பட வேண்டிய போதிலும் இது இருப்பு நியமத்தினால் மேவுகை செய்யப்படாததுடன் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் நியமத்தின் கீழ் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | 2019 ஆம் ஆண்டின் முடிவுக் கணக்குகளினூடாக வெளிப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும். | ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் நியமங்களின் கீழ் வெளிப்படுத்தப்பட வேண்டும். |
| (இ) | 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதி நிலைமைக் கூற்றில் ரூபா 21,297,645 ஆன இருப்பு பெறுமதியொன்று குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 09 இன் 47(அ) ஆம் இலக்க பந்தியின் பிரகாரம் பயன்படுத்தப்பட்ட கிரய சூத்திரம் உட்பட இருப்பு கணிப்பிடும் போது பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கை தொடர்பாக போதியளவு வெளிப்படுத்துவதற்கு நிதிக் கூற்றுக்களில் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | 2019 ஆம் ஆண்டில் வெளிப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும். | பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டு கொள்கை தொடர்பாக போதியளவில் வெளிப்படுத்தப்பட வேண்டும் |
| (ஈ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 19<br><br>மேற்படி நியமத்தின் 05 ஆம் பிரிவின் பிரகாரம் நிறுவகத்தின் ஊழியர் நலன்புரி முறைமை செயற்படுத்தப்பட்டிருந்ததுடன் நியமத்தின் 140 மற்றும் 141 ஆம் பிரிவின் பிரகாரம் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப் பட்டிருக்கவில்லை. | 2019 ஆம் ஆண்டில் வெளிப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும். | ஊழியர் நலன்புரி முறைமை தொடர்பாக நிதிக் கூற்றுக்களில் போதியளவில் வெளிப்படுத்தப்பட வேண்டும் |

### 1.5.3 கணக்கீட்டுக் கொள்கைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| அரச மானியங்களிலிருந்து கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 138,787,751 ஆன நடைமுறையல்லாத சொத்துக்கள் வருடாந்தம் பெறுமானத்தேய்வு செய்யப்பட்டிருந்த போதும் மூலதன மானியங்களை கணக்கீடு செய்வதற்காக கணக்கீட்டுக் கொள்கையொன்று இனங் காணப்பட்டிருக்கவில்லை. | 2019 ஒக்தோபர் 06 ஆந் திகதி நடாத்துவதற்கு நிர்ணயிக்கப்பட்டிருந்த கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்டதன் பின்னர் கொள்கையொன்று இனங்காணப் பட்டு எதிர்காலத்தில் கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | மூலதன மானியங்களை கணக்கீடு செய்வதற்காக கணக்கீட்டுக் கொள்கை யொன்று இனங்காணப் பட்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும் |

### 1.5.4 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) அருங்கலைகள் பேரவையின் 112 பயிற்சி நிலையங்களுக்காக செலவிடுவதற்காக வழங்கப்பட்டுள்ள பணத்தில் எஞ்சியவை உட்பட அந்நிலையங்களில் விற்பனையிலிருந்து கிடைத்த வருமானமான ரூபா 2,941,212 தொகை மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. அத்தொகை விற்பனை நிலையங்களில் காணப்பட்ட சேமிப்புக் கணக்குகளில் மீதிகளாக காணப்பட்டன. | உரிய வங்கிக்கு கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதுடன் அம் மீதிகள் உறுதிப்படுத்தப்பட்ட கடிதம் கிடைத்ததன் பின்னர் அப்பணம் தலைமை அலுவலகக் கணக்கிற்கு மாற்றப்பட்டு அது மாகாண மட்டத்தில் கணக்கு ஆரம்பிக்கப்பட்டு அதன் ஊடாக பயிற்சி நிலையங்களில் கொடுக்கல் வாங்கல்கள் மேற்கொள்ளப்படும் | பதிலின் பிரகாரம் சீராக்கம் செய்வது பொருத்தமாகும். |
| (ஆ) 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அருங்கலைகள் பேரவைக்கு சொந்தமான பயிற்சி நிலையங்களில் உள்ள நிலையான சொத்துக்கள் இனங்காணப் பட்டு மதிப்பீடு செய்து கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அருங்கலைகள் பேரவையின் பயிற்சி நிலையங்களில் உள்ள சொத்துக்கள் பயன்படுத்துதல் மாத்திரம் இடம்பெறுகின்றது. | பயிற்சி நிலையங்களில் உள்ள சொத்துக்கள் இனங்காணப்பட்டு மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும் |
| (இ) 2017 ஆம் ஆண்டிற்குரியதாக மீளாய்வாண்டின் போது கொடுப்பனவு செய்யப்பட்ட ரூபா 240,000 கூட்டுப் பெறுமதியான குத்தகை செலவினம், மீளாய்வாண்டின் செலவினமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் அட்டுறு அடிப்படையில் கணக்கு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | அட்டுறு அடிப்படையில் சபையினால் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டும் |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | மீளாய்வாண்டிற்காக அமைச்சிடமிருந்து கிடைக்க வேண்டிய மூலதன மானியம் மற்றும் மூலதன மானியங்களிலிருந்து செலுத்த வேண்டிய ரூபா 5,828,720 ஆன மீண்டெழும் மானியம் பெறுவனவு மற்றும் கொடுப்பனவுகள் நிதிக்கூற்றுக்களில் பதிவு செய்யப்பட்டிருந்தது. | இந்த ரூபா 5,828,720 தொகையை மூலதனமாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | மீண்டெழும் மற்றும் மூலதனம் செலவினம் சரியாக இனங்காணப்பட்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும் |
| (உ) | மீளாய்வாண்டிற்காக பித்தளை மூலப்பொருள் கொள்வனவு செய்வதற்கு வரிசை அமைச்சு மூலம் கிடைத்த ரூபா 5,266,069 ஆன பெறுமதி மூலப்பொருள் விற்பனையாக பதிவு செய்தமையால் மூலப்பொருள் விற்பனை வருமானம் அப் பெறுமானத்தினால் கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது. | இது 2019 ஆம் ஆண்டின் கணக்கில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் | மூலதன மானியம் சரியாக இனங்காணப்பட்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும் |
| (ஊ) | 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளுக்குரிய ரூபா 1,085,853 தொகையான கணக்காய்வுக் கட்டணங்கள் குறை நிதி ஏற்பாடு மீளாய்வாண்டின் செலவினமாக சீராக்கப்பட்டமையால் மீளாய்வாண்டின் செலவினம் அப் பெறுமானத்தினால் கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது. | அவதானிப்பு சரியானது | மீளாய்வாண்டின் செலவினம் சரியாக இனங்காணப்பட்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும் |
| (எ) | அருங்கலைகள் பேரவையால் மீளாய்வாண்டில் இலங்கை வனசீவராசிகள் நிறுவனத்திற்கு விஷேட கட்டளையொன்றாக வழங்குவதற்கு 04 கைப்பணியாளர்கள் மூலம் ரூபா 478,748 பெறுமதியான பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. அப்பொருட்களுக்காக வனசீவராசிகள் நிறுவனத்தின் மூலம் ரூபா 165,435 தொகை மாத்திரம் கிடைத்திருந்ததுடன் கொள்வனவு செய்யப்பட்ட பொருட்களுக்காக கைப்பணியாளர்களுக்கு ரூபா 147,500 தொகை மாத்திரம் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. அதன் கைப்பணியாளர்களுக்கு செலுத்த வேண்டிய ரூபா 318,105 கூட்டு பெறுமதி செலுத்தப்பட வேண்டிய செலவினமாகவும் அருங்கலைகள் பேரவைக்கு | எஞ்சிய பணத்தை விரைவில் தருமாறு வனசீவராசிகள் நிறுவனத்திற்கு அறிவிக்கப் பட்டுள்ளது. | கொடுக்கல் வாங்கல்கள் முறையாக கணக்கீடு செய்யப்பட வேண்டியதுடன் இப்பணத்தை அறவிட்டு கைப்பணியாளர்களுக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

கொள்வனவாளர்களிடமிருந்து கிடைக்க வேண்டிய ரூபா 313,313 பெறுமதி கிடைக்க வேண்டிய வருமானமாக கணக்கீடு செய்யப்படாமலும் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருந்தன.

### 1.5.5 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| விடயம் | | நிதிக்கூற்றுக் களின் பிரகாரம் பெறுமதி | அண்மித்த அறிக்கைக ளின் பிரகாரம் பெறுமதி | வேறுபாடு | முகாமைத்துவத்தி ன் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா | | |
| (அ) | முற்பணக் கணக்கு | (18,984) | 318,531 | 337,515 | சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது | பதிலின் பிரகாரம் சீராக்கம் செய்வது பொருத்தமாகும். |
| (ஆ) | நிலையான சொத்துக்கள் | 78,069,250 | 41,339,759 | 36,729,491 | சொத்துக்கள் மதிப்பீடு செய்யப்பட்டு சரியான பெறுமதிகளை புத்தகங்களில் எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிலையான சொத்துக்களை மதிப்பீடு செய்து கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.5.6 கணக்காய்விற்கான எழுத்துமுலமான சான்றுகள் இன்மை

| விடயம் | தொகை | சமர்ப்பிக்கப்படாத சான்றுகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| | ரூபா | | | |
| வியாபார மற்றும் ஏனைய பெற வேண்டிய மீதிகள் | 8,917,758 | மீதிகளை உறுதிப்படுத்தல் கடிதங்கள் | குறித்த மீதிகளை உறுதிப்படுத்து வதற்கு கடன்பட்டோருக்கு கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன. | மீதிகளை உறுதிப் படுத்தல் கடிதங்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

## 1.6 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.6.1 பெற வேண்டிய தொகை

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு ரூபா 8,917,758 கூட்டுத்தொகையான பெற வேண்டிய மீதிகளாக பதிவு செய்யப்பட்டிருந்ததுடன் அம் மீதிகளில் ரூபா 2,394,938 கூட்டுத்தொகை 3 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலம் தீர்வுசெய்யப்படாத மீதியொன்றாக இருந்தது. இந்த கடன் மீதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை | 03 ஆண்டுகளுக்கு மேற்பட்ட பழமையான ரூபா 2,347,522 தொகை லக்சல நிறுவனத்திடமிருந்து கிடைக்க வேண்டிய மீதியொன்றாக இருந்ததுடன் இது தொடர்பாக லக்சல நிறுவனத்திற்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. | நிலுவையான பழைய கடன்மீதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 1.7 தொடர்புடைய தரப்பினர் மற்றும் தொடர்புடைய தரப்பினர் கொடுக்கல் வாங்கல்களை வெளிப்படுத்தாமை

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| தேசிய அருங்கலைகள் பேரவையின் தலைவர் தேசிய வடிவமைப்பு நிலையத்தின் பணிப்பாளர் சபை உறுப்பினராக அந்நிறுவனத்தின் நிதி மற்றும் செயற்பாட்டு தீர்மானங்களுடன் தொடர்புபடுவதாகவும் அது தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | 2019 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் மூலம் வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் | பதிலின் பிரகாரம் சீராக்கம் செய்வது பொருத்தமாகும். |

## 1.8 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | | இணக்கமின்மைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 2015 யூலை 14 ஆந் திகதி 03/2015 ஆம் இலக்க நிதி அமைச்சின் சுற்றறிக்கை | முற்பணங்களை தீர்வு செய்யும் போது வழங்கப்பட்ட தொகை ஆண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு கூடுதலாக தாமதித்த கூடாத போதிலும் 2000 முதல் 2016 | பணிப்பாளர் சபைக்கு சமர்ப்பித்து அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | இப்பழைய முற்பண மீதிகளை தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | ஆம் ஆண்டுகளில் 08 சந்தர்ப்பங்கள் வழங்கப்பட்ட ரூபா 258,651 ஆன துணைக் கட்டு நிதி மீளாய்வாண்டின் இறுதி திகதி வரையிலும் தீர்வு செய்யப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஆ) | 2015 யூன் 01 ஆந் திகதிய பீஎடீ 02/2015 ஆம் இலக்க நிதி அமைச்சின் சுற்றறிக்கை. | மீளாய்வாண்டில் முதலாவது அரையாண்டில் கைப்பணி சபையின் 08 உத்தியோகத்தர்களுக்காக சுற்றறிக்கை எல்லையை மிகைத்து ரூபா 98,276 ஆன தொலைபேசி செலவினமாக கூடுதலாக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | கூடுதலாக கொடுப்பனவு செய்த தொகையை கூடிய வரைவில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் | கூடுதலாக கொடுப்பனவு செய்த தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் சுற்றறிக்கை பிரகாரம் செலுத்த வேண்டிய எல்லைக்குள் தொலைபேசி செலவினம் கொடுப்பனவு செய்யப்பட வேண்டும். |
| (இ) | 2003 ஒக்தோபர் 28 ஆந் திகதிய பீஎடீ 12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | மீளாய்வாண்டில் 04 சந்தர்ப்பங்களில் அருங்கலைகள் பேரவையின் உத்தியோகத்தர்கள் சுற்றறிக்கையின் பிரகாரம் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளாமல் வெளிநாடு செல்வதற்காக ரூபா 2,128,799 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | தற்போது அனுமதி பெற்றுக் கொள்வதற்கும் உரிய அறிக்கைகளை சமர்ப்பிக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கை பிரகாரம் செயற்பட வேண்டியதுடன் அதன் பிரகாரம் வெளிநாட்டு சுற்றுலாவிற்கு அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட வேண்டும். |

## 2. **நிதி மீளாய்வு**

---------------------------------

### 2.1 **நிதி விளைவுகள்**

-------------------------------------

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவுகள் ரூபா 7,068,565 ஆன பற்றாக்குறையொன்றாக இருந்ததுடன் அதனோடொத்த முன்னைய ஆண்டிற்கான பற்றாக்குறை ரூபா 5,336,897 ஆக இருந்தது. அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 1,731,668 ஆன வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. இவ்வீழ்ச்சிக்கு மொத்த வருமானம் ரூபா 27,046,881 ஆல் அதிகரித்திருக்கையில் அதற்கு எதிராக மொத்தச் செலவினம் ரூபா 28,778,549 ஆல் அதிகரித்திருந்தமை பிரதான காரணங்களாக இருந்தன.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | அம்பாறை உஹன மட்பாண்ட உற்பத்தி கிராமத்தின் நலனாளிகளுக்கு பகிர்ந்தளிப்பதற்கு மீளாய்வாண்டில் கொள்வனவு செய்த ரூபா 1,272,333 பெறுமதியான கைத்தறி இயந்திரங்கள், ஆடை நெய்தல் இயந்திரங்கள், தையல் இயந்திரங்கள், மின் அழுத்திகள், கூரைத் தகரங்கள் உட்பட 10 வகையான பொருட்கள் மற்றும் உபகரணங்கள் 2019 மே மாதம் 20 ஆந் திகதி வரை நலனாளிகளுக்கு பகிர்ந்தளிக்கப் பட்டிருக்கவில்லை. | கிராமத்தின் பொது வசதிகள் நிலையம் அபிவிருத்தி செய்து முடிவடைந்தவுடன் கிராமத்தை திறந்து அங்கு கைப்பணியாளர்களுக்கு உபகரணங்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | கைப்பணியாளர்களுக்கு பகிர்ந்தளிப்பதற்கு கொள்வனவு செய்த பொருட்கள் மற்றும் உபகரணங்கள் கைப்பணியாளர்களுக்கு கையளிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | காணி ஆணையாளர் திணைக்களத்தினால் 4/10/36563 மற்றும் 2013 நவம்பர் 28 ஆந் திகதி கடிதத்தில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு இணங்க அருங்கலைகள் பேரவையின் முகாமைத்துவ செயற்பாட்டை மேற்கொள்ளாமையால் 2019 மே 25 ஆந் திகதி வரையிலும் அம்பாந்தோட்டை காவன் திஸ்ஸபுர கைவினைப் பொருள் உற்பத்தி மற்றும் விற்பனை கிராமத்தின் நிர்மாணங்களின் காணிக்காக சட்டரீதியான குத்தகை உடன்படிக்கை மேற்கொள்ளாப்படாதிருந்ததுடன் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 8,338,797 கூட்டுத்தொகையான செலவு செய்யப்பட்டு வெவ்வேறு நிர்மாணங்கள் அருங்கலைகள் பேரவையினால் மேற்கொள்ளப் பட்டிருந்தன. அவ்வாறே | இக் காணியை கையேற்பதற்காக ஒரே தடவையில் செலுத்த வேண்டிய தொகையான ரூபா 720,000 தொகையை கொடுப்பனவு செய்து விடுவிப்பதற்காக வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளதுடன் அந்த வேண்டுகோள் காணி ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அதற்காக அறிவுறுத்தல் கிடைக்கப் பெறவில்லை. அத்துடன் பணக் கொடுப்பனவின் பின்னர் குத்தகை உறுதியை கைச்சாத்திட முடியுமொன பிரதேச செயலாளர் அறிவித்திருந்தார். அதன் பிரகாரம் காணி ஆணையாளருடன் கலந்துரையாடப்பட்டு வருகின்றது. | காணி ஆணையாளர் நாயகத்தின் அறிவுறுத்தலின் பிரகாரம் பிரதேச செயலாளருடன் குத்தகை உடன்படிக்கையொன்று மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வருடாந்த குத்தகை தொகையாக ரூபா 240,000 வீதம் அருங்கலைகள் பேரவையினால் பிரதேச செயலகத்திற்கு வழங்கப்பட்டிருந்தது. | | |
| (இ) | அருங்கலைகள் பேரவையின் 02 அரச வங்கி நடைமுறைக் கணக்குகளுக்குரிய ரூபா 55,598 கூட்டுப்பெறுமதியான இனங்காணப்படாத வைப்புப் பணம் இனங்காணப்பட்டு தீர்வு செய்யப்படாமல் வங்கி கணக்கினக்கக் கூற்று தயாரிக்கப்பட்டிருந்தது. | இனங்கண்டு தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு ஆலோசனையின் பிரகாரம் ஆராய்ந்து பார்த்து தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | அருங்கலைகள் பேரவையின் ஒரு வங்கிக் கணக்கிற்குரிய ரூபா 47,927 ஆன கூட்டுப் பெறுமதி 2012 ஆம் ஆண்டு முதல் இனங் காணப்பட்டு தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமல் வங்கி கணக்கினக்கக் கூற்று தயாரிக்கப்பட்டிருந்தது. | இந்த இணங்காணப்படாத வரவுப் பெறுமதி கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு ஆலோசனையின் பிரகாரம் மேலும் இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | கணக்காய்வு குழு ஆலோசனையின் பிரகாரம் இனங்காணப்பட்டு தீர்வு செய்யப்பட வேண்டும். |
| (உ) | மீளாய்வாண்டில் 09 கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள் பயன்படுத்தப்பட்டு ரூபா 339,125 கூட்டுப் பெறுமதியான அச்சிட்டு வேலைகள் தினாலி கிரபிக்ஸ் (Dinali Graphics) நிறுவனத்தின் மூலம் மேற்கொள்ளப் பட்டிருந்ததுடன் இப் பெறுகை செயற்பாட்டிற்குரிய ஒழுங்கு முறையான மற்றும் பொருத்தமான வகையில் பேணப்படும் கோவை மற்றும் அறிக்கை என்பன கணக்காய்விற்கு முகாமைத்துவத்தினால் சமர்ப்பிக்கப்படவில்லை. | இது தொடர்பாக ஆரம்ப புலனாய்வொன்று ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்நிறுவனத்தின் மூலம் அச்சிட்டு நடவடிக்கை மேற்கொள்வது தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது. | பெறுகை செயற்பாடுகள் பெறுகை வழிகாட்டல் கோவையின் பிரகாரம் மேற்கொள்ளப்பட வேண்டியதுடன் அது தொடர்பான அறிக்கை போதியளவில் பேணிச் செல்ல வேண்டும் மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவு தொடர்பாக ஆராய்ந்து பார்த்து ஆரம்ப புலனாய்வு தீர்மானத்தின் அடிப்படையில் எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 3.2 செயற்பாட்டு வினைத்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
| --- | --- | --- | --- |
| (அ) | மீளாய்வாண்டினுள் ஆசிரியர் கைப்பணி பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 750 கைப்பணியாளர்களுக்கு ரூபா 900,000 செலவு செய்து உபகரணங்கள் வழங்குவதற்கு செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் திட்டமிடப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டில் ரூபா 464,000 செலவிடப்பட்டு 244 இற்க உபகரணங்கள் வழங்கப்பட்டிருந்தமையால் இந் நோக்கத்தை அடைந்து கொள்வதின் நிதிச் செயன் முன்னேற்றம் 52 சதவீதமாகவும் பௌதீக செயன் முன்னேற்றம் 33 சதவீதமாகவும் இருந்தது. | முன்னைய ஆண்டுகளில் கைப்பணி வகுப்புக்களுக்கு வழங்கப்பட்டிருந்த உபகரணங்களில் ஒரு பகுதி இவ்வாண்டில் பயன்படுத்தப்பட்டமையால் அத்தியாவசிய வகுப்புக்களுக்காக மாத்திரம் உபகரணங்கள் வழங்கப்பட்டிருந்தன. | பயிற்சி நிகழ்ச்சிகளுக்காக போதியளவு உபகரணங்கள் தேவைப்பாடு இனங்காணப்பட்டு அது தொடர்பாக திட்டங்களில் குறிப்பிடப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டில் பயிற்சி நிலையங்களில் பயிற்சி பெற்ற 300 பயிலுனர்களுக்கு ரூபா 1,000,000 மதிப்பிடப்பட்ட கிரயமான இயந்திரங்கள், பொறிகள், உபகரணங்கள், ஆயுதங்கள் மற்றும் உபகரணங்கள் மற்றும் மூலப் பொருட்கள் வழங்குவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் உள்ளவாறான ரூபா 521,000 செலவிடப்பட்டு 104 நலனாளி களுக்கு மாத்திரம் உபகரணங்கள் மற்றும் மூலப்பொருட்கள் வழங்கப்பட்டிருந்தமையால் அதன் நிதி முன்னேற்றம் 52 சதவீதமாகவும் பௌதீக செயன் முன்னேற்றம் 35 சதவீதமாகவும் இருந்தன. | கைப்பணிப்பாளர்கள் உண்மையாகவே துறையில் ஈடுபட்டுள்ளவர்களா என ஆராய்ந்து பார்த்து உறுதிப்படுத்தியதன் பின்னர் உபகரணங்கள் வழங்கல் இடம் பெறுவதால் 104 கைப்பணிாளர்களுக்கு மாத்திரம் உபகரணங்கள் வழங்கப்பட்டிருந்தன. | பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களுக்காக போதியளவு உபகரண தேவைப்பாடு சரியாக இணங்காணப்பட்டு திட்டங்களில் உள்ளடக்கப்படல் வேண்டும். |
| (ஈ) | மீளாய்வாண்டின் செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் தேசிய வர்த்தக கண்காட்சியொன்று நடாத்தியதன் மூலம் ரூபா 10,000,000 ஆன விற்பணை பெறுமதியொன்றும் வெளிநாட்டு மேம்படுத்தல் மற்றும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் மூலம் ரூபா | உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு மேம்படுத்தல் நிகழ்ச்சித்திட்டங்கள் மூலம் எதிர்பார்க்கப்பட்ட விற்பனை வருமானத்தை செயலாற்றல் அறிக்கையில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | பதிலின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் பொருத்தமானதாகும். |

4,000,000 விற்பனை இலக்கு எதிர்பார்க்கப்பட்டிருந்த போதிலும் செயலாற்றல் அறிக்கையில் அதற்கான பெற்றுக்கொண்ட செயற் முன்னேற்றம் உள்ளடக்கப்படாமையால் அச் செயற்பாடுகளின் செயன் முன்னேற்றத்தை பரீட்சிக்க முடியாதிருந்தது.

### 3.3 பெறுகை முகாமைத்துவம்

-------------------------------------------

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | அம்பாந்தோட்டை காவன்திஸ்ஸபுர கிராமத்தின் வாகன தொகுதியை நிர்மாணிப்பதற்காக ரூபா 2.782,773 ஆன ஒப்பந்தம் 2006 சனவரி 25 ஆந் திகதிய 08 ஆம் இலக்க பெறுகை வழிகாட்டலுக்கு அமைவாக விலை விபரங்கள் கோராமல் பணிப்பாளர் சபையின் தீர்மானத்தின் பேரில் வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு வழங்கப்பட்டிருந்தது. அவ்வாறே பெறுகை வழிகாட்டல் கோவையின் 5.4.6 பிரிவின் பிரகாரம் நிறுத்தி வைத்தல் பணம் கழிக்கப்படாமல் முழுத்தொகையும் வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு விடுவிக்கப்பட்டிருந்தது. அதிகார சபையினால் அச்செயற்பாடு ‘‘ரத்ன கன்ரக்ஷன்’’ நிறுவனத்திற்கு உப ஒப்பந்தமொன்று வழங்கப்பட்டிருந்தது. | அரச நிறுவனமொன்றாக இருப்பதால் அந் நிறுவனத்தின் மூலம் இந்த ஒப்பந்ததை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | பெறுகை செயற்பாடுகள் பெறுகை வழிகாட்டல் கோவைக்கு இணங்க நிறைவேற்றப்பட வேண்டும். |
| (ஆ) | மேற்படி கிராமத்தின் நில அலங்காரச் செயற்பாட்டினை நிறைவேற்றுவதற்காக பெறுகை வழிகாட்டல் கோவைக்கு முரணாக இயக்குனர் சபையின் தீர்மாணத்தின் அடிப்படையில் வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு ரூபா 2,666,508 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் அச்செயற்பாடு ‘‘ரத்ன கன்ரக்ஷன்’’ நிறுவனத்திற்கு உப ஒப்பந்தமொன்று வழங்கப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் கூறுவிலை கோருவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | பெறுகை வழிகாட்டல் கோவைக்கு இணங்க ஒப்பந்தக்காரர்கள் தெரிவு செய்தல் ஒப்பந்த வழங்கல் மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| (இ) பெறுகை வழிகாட்டல் கோவையின் 8.9.3 பிரிவின் பிரகாரம் பொருட்கள் அல்லது சேவைகள் பெற்றுக்கொள்ளும் போது முறையான ஒப்பந்த உடன்படிக்கைக்கு வருவதற்கு செயற்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டில் அம்பாந்தோட்டை காவன்திஸ்ஸபுர கைப்பணி கிராமம் மற்றும் முயற்சியாளர் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் ரூபா 3,333,042 பெறுமதியான பொருட்கள் சேவைகளைப் பெற்றுக்கொள்ளும் போது உரிய ஒப்பந்தக்காரருடன் எழுத்துமூல உடன்படிக்கையொன்றை மேற்கொள் வதற்கும் பெறுகை வழிகாட்டல் கோவையின் 5.4.8 பிரிவின் பிரகாரம் செயலாற்றல் பாதுகாப்பு பிணை பொறுப்பினை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்வரும் காலங்களில் செயலாற்றல் பிணை பொறுப்பினை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும். | பெறுகை செயற்பாடுகள் பெறுகை வழிகாட்டல் கோவைக்கு இணங்க நிறைவேற்றப்பட வேண்டும். |

**4. கணக்களிபொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் மீளாய்வாண்டில் 25 மாவட்ட ரீதியான புதிய கைப்பணிக் தொழில் அருங்கலைகள் பேரவையை தாபிப்பதற்கும் 50 கைப்பணியாளர் சங்கங்களை தாபிப்பதற்கும் நாளது வரையாக்கு வதற்கும் திட்டமிடப்பட்டிருந்த போதிலும் முறையே 06 மாவட்ட அருங்கலைகள் பேரவையும் 15 கைப்பணியாளர் சங்கங்களும் தாபிக்கப்பட்டமையால் அதன் பௌதீக முன்னேற்றம் முறையே 24 சதவீதம் மற்றும் 30 சதவீதமாக இருந்தன. | 2019 முதல் காலாண்டில் 25 மாவட்டங்களும் மேவுகை செய்யப்படும் வகையில் மாவட்ட அருங்கலைகள் பேரவைகளைத் தாபிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளக்கப்பட்ட இலக்குகளை அடைந்து கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 4.2 உள்ளகக் கணக்காய்வு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டில் அருங்கலைகள் பேரவையின் உள்ளக கணக்காய்வு பிரிவின் மூலம் வழங்கப்பட்டிருந்த 22 கணக்காய்வு விசாரணைகளில் 15 இற்கு பதிலளிக்க நடவடிக்கை எடுக்கப்படாமையால் உள்ளக கணக்காய்வு பிரிவுகளின் செயற்பாட்டை முகாமைத்துவத்தினால் செயற்திறனாக வும் வினைத்திறனாகவும் நிறுவனத்தின் நிர்வாக நடவடிக்கை களுக்காக பயன்படுத்தப்பட்டிருக்க வில்லை. | பதிலை வழங்குமாறு உரிய பிரிவுத் தலைவர்களுக்கு நினைவூட்டல் கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. | உள்ளக கணக்காய்வு பிரிவு விசாரணைக்கான பதிலை வழங்குவதற்கும் அவற்றில் குறிப்பிடப்பட்ட விடயங்கள் தொடர்பாக கவனம் செலுத்தி சீராக்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |